
# அன்பே சிவம்



மருத்துவர் தியாகராஜா சுதர்மனின்

# திருமந்திரமும் திருவாசகமும்

கூறும்

# குறுங்கதைகள்

வெளியீடு
அகில இலங்கை சைவ மகாசபை
யாழ்ப்பாணம்.
2022

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **அன்பே சிவம்** |
| நூலாசிரியர் | : | **Dr.தி.சுதர்மன்** |
| நூலின் வகை | : | **சமயம் - குறுங்கதைகள்** |
| முதற்பதிப்பு | : | 01.03.2022 |
| பதிப்புரிமை | : | **அகில இலங்கை சைவ மகாசபை** |
| வெளியீடு | : | **அகில இலங்கை சைவ மகாசபை** |
| தாள்வகை | : | **60gsm Bank Paper** |
| அளவு | : | **A5** |
| பக்கங்கள் | : | iv + 43 |
| அச்சுப்பதிப்பு | : | நாவலர் அச்சகம் |
| **ISBN NO** | : | 978 - 624 - 97544 - 1 - 6 |
| விலை | : | 100/= |

# வெளியீட்டுரை

## *அன்பே சிவத்திற்கு உயிரூட்டும் அருந்தமிழ் குறுங்கதைகள்*

சைவமும் தமிழும் வேறுபிரித்து அறிய முடியாத எம் பண்பாட்டு செல்நெறிகள் . அந்தவகையில் சைவத் தமிழ் ஆன்மீக - வாழ்வியல் - அறநெறிக் கருவூலமான சித்தர் திருமூலநாயனார் எமக்கு அளித்த திருமந்திரத்தின் சில மந்திரங்களை, அடிப்படை எண்ணக் கருவாகக் கொண்டு திருவாசகத்தின் சிவபுராணத் தேன்துளிகளையும் மேற் கோள்காட்டி நம் சிறார்களுக்காக இந்த நூலை வெளியிடுவதில் அகில இலங்கை சைவ மகாசபை மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றது.

இந்த அருமையான குறுங்கதைகளை ஆக்கித் தந்துள்ள மருத்துவர் தி.சுதர்மன் அவர்கள் சிறந்த சிறுகதையாசிரியர், எழுத்தாளர் என்பதற்கு அப்பால் உறுதியான தமிழ்ச் சைவப்பற்றாளர். இலங்கை தமிழ்ச் சைவப்பேரவையின் முதலாவது பொதுச் செயலாளர். அகில இலங்கை சைவ மகாசபையின் மூத்த உறுப்பினர். பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலய பரிபாலனசபை உறுப்பினர்களில் ஒருவர்.

யாழ் மாநகரசபையில் சித்த மருத்துவ அதிகாரியாக கடமையாற்றும் மருத்துவர் சுதர்மன் **“ஆகாரமே ஆதாரம் ”** எனும் சிறந்த, உணவு தொடர்பான மருத்துவ நூலைப் படைத்து, தமிழ் உலகிற்கு அளித்தவர். அந்த வகையில் சிறந்த ஆன்மீக - மனித நேயச் சிந்தனைச் செயற்பாட்டாளரான மருத்துவர் தி.சுதர்மனின் ஆக்கத்தில் வெளிவரும் இந்நூல் எம் சிறார்களை இளவயதிலேயே நன்னிலைப்படுத்தும் நோக்கத்தில் அமைந்த உன்னத திருமந்திரங்களுக்கு உயிரூட்டும் **“அன்பே சிவம்”** குறுங்கதைகளை சைவத்தமிழ் உலகம் குறிப்பாக நம் சிறார்கள் படித்து பயனுற வேண்டும் என அகில இலங்கை சைவ மகாசபை சார்பாக வேண்டி நிற்கின்றோம்.

**தமிழ் எங்கள் மொழி, சைவம் எங்கள் வழி**

- பொதுச்செயலாளர்
**அகில இலங்கை சைவமகா சபை.**

# நூலாசிரியர் சிந்தையில் இருந்து,

**"ஒண்சுட ரோன்அயன் மால்பிர சாபதி**
**ஒண்சுட ரான இரவியோ டிந்திரன்**
**கண்சுட ராகிக் கலந்தெங்குந் தேவர்கள்**
**தண்சுட ராயெங்கும் தற்பர மாமே"**

- அண்டலிங்கம், 7ம் தந்திரம், திருமந்திரம்

ஒளிசேர்ந்த செம்மை நிறத்தோன் ஆன சிவன், திருமால், பிரம்மா, சூரியன் சந்திரன், இந்திரன் மற்றும் தேவர்கள் முதலானோரில் கலந்து உள்நின்று, எங்கும் நிறைந்து குளிர்ந்தருள் செய்கின்றான்.

திருமால் உருவில் என்னை ஆட்கொண்டு அவன் அருளால் திருமந்திரத்தில் சில துளிகளையும், சிவபுராணத்தில் சிலதுளிகளையும் குறுங்கதைகளாக்க அருள் புரிந்த சிவனருளுக்கு நன்றி.

இக்குறுங்கதைகளை எழுத ஊக்க சக்தியாக இருந்த எனது குடும்பத்துக்கு நன்றி. இக் குறுங்கதைகளை நூலாக்கி வெளியிட்ட அகில இலங்கை சைவ மகாசபையினருக்கும் எனது நன்றி உரித்தாகும்.

இக்கதைகள் மூலம் நாம் யார்? நம் கடமை என்ன? எப்படி வாழவேண்டும் என்ற எண்ணம் வாசிப்போர் மத்தியில் ஏற்படுமானால்! அதுவும் அவன் சித்தமே.

சொற்பிழை, பொருட்பிழை இருப்பின் மன்னித்தருள்க!

நன்றி

திருமூலர், மாணிக்கவாசகர் ஆசிகளுடன்
**Dr தியாகராஜா சுதர்மன் (மானிப்பாய் சுதன்)**

# 01.இறைவன்

**"ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்**
**நின்றவன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து**
**வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்**
**சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே"**

-கடவுள் வாழ்த்து, பொதுப்பாயிரம், திருமந்திரம்.




**கடவுள் என்றால் யார்? அவரைக் காணமுடியுமா?**

மகன் கயூரனின் கேள்விக்கு எப்படி பதில் சொல்வது? என்று தெரியமால் முழித்துக் கொண்டிருந்தான் கயூரனின் தந்தையான சிவானந்தன்.

எத்தனை கடவுள்கள் உள்ளார்கள்? மீண்டும் கேள்வி வந்தது.

இறைவன் ஒருவன்தான் ஆனால் வேறு வேறு வடிவத்தில் நாம் விரும்பிய வடிவில் வழிபடுகின்றோம். ஒவ்வொரு தேசத்தவர்களும் வெவ்வேறு சமயங்களாக வேறு வேறான வடிவங்களில் வழிபடுகின்றனர்.

அதைத்தான் மாணிக்கவாசகர் "**தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**" என திருவாசகத்தில் பாடியுள்ளார். அதாவது தென்னாடு எனப்படும் கீழைத் தேசத்தின், பெரும்பாலான நாடுகளில் சிவன் என்று வணங்கப்படும் இறைவன் ஏனைய இடங்களில் வெவ்வேறு பெயர்கள் கொண்டு அழைக்கப் படுகின்றான்.

எங்கள் சமய சேர் இதைச் சொல்லவேயில்லை? என்றவாறு, கடவுள் பிழை செய்தால் தண்டிப்பாரா? யோசனையுடன் கேட்டான் மகன்.

சிவானந்தன் சிரித்துக் கொண்டான். பக்தியை பயத்தின் ஊடாக புகட்டியதன் விளைவு? இறைவனில் அன்பு, நம்பிக்கையை ஏற்படுத்துவதை விடுத்து, கடவுள் மீது பயத்தை ஏற்படுத்தி இருக்கின்றது.

சிவபெருமான் அன்பே உருவானவன். அன்புதான் சிவனுக்கு முதன்மையானது. தூய்மையான தன்னலமற்ற அன்புக்கு மட்டும் கட்டுப்பட்டவர். அறியாமல் செய்யும் பிழைகளை மன்னித்தருள்வார். ஆனால் தெரிந்தே செய்யும் பிழைகளை, அப்பிழைகளை உணர்ந்து, திருத்திக் கொள்ளாவிடில் தண்டனையை நிச்சயம் தருவார். அதுவும் அவர்கள் மீது கொண்ட அன்பினால் அவர்களை மேன்மைப்படுத்தவே. அதனாலேதான் நாம் உயிர் களிடத்தில் அன்பு செலுத்துதல் வேண்டும் என்கின்றன ஒவ்வொரு மதங்களும்.

கடவுள் என்றால் யார் என்று சொல்லவில்லையே? தனது

கேள்வியில் பிடிவாதமாக நின்றுகொண்டான் கயூரன்.

எங்களைப் படைத்து, காத்து, வீடுபேற்றைத் தருபவர் தான் கடவுள். எங்கும் எதிலும் அவன், அவள், அது என மூன்றாகவும் உள்ளவன்.



அதாவது "கட" என்றால் எல்லாவற்றையும் கடந்து இருப்பவர். "வுள்" என்பது உள் என்பதாகும். அதாவது அவ் எல்லாவற்றினுள்ளும் இருப்பவர் என்பது பொருள் ஆகும். எனவே எங்களுக்குள்ளும் இருப்பவன். அன்புடன் இருந்தால் நாங்களும் கடவுளின் குணம் படைத்தவர்கள்தான்.

அன்பில்லாத இடத்து கடவுள் எங்களுக்குள் இருக்காது போய் விடுவார்.

இதைத்தான் மாணிக்கவாசகர் சிவபுராணத்தில் **“நாற்றத்தின் நேரியாய், சேயாய் நணியானே ”** என குறிப்பிட்டுள்ளார். அதாவது அன்புள்ளவர்களிடத்தில், பூவில் நறுமணம் இருப்பதுபோல் அவர்களுடன் சேர்ந்திருப்பவன் எனப் பாடியுள்ளார்.

எப்படியப்பா கடவுளை நாம் காணலாம்?

என்னடா இது? கடவுளிடம் மிக்சர் வேண்டாமல் விடமாட்டான் போலிருக்கிறதே! அன்புடன் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கின்ற நான்கு வழிகளிலும் இறைவனைக் காணலாம். அதற்கு நல்லோரின் நட்பும் நல்லதோர் குருவும் கிடைத்தால் இலகுவாக காணலாம்.

நல்லவர்கள் என்றால்?

தெரியலையே மகனே! அவர்களைத்தானே நானும் தேடிட்டு இருக்கின்றேன் என்று சொல்லத்தான் நினைத்தான். வேண்டாம் நல்லவர்கள் என்றால் எப்படி இருப்பார்கள் என்று சொல்லி விடுவோம் என்று நினைத்தவாறே,

**“அவனருளாலே அவன்தாள் வணங்கும்”** சந்தர்ப்பம் இவனுக்கு கிடைக்கட்டும் என்று சிவனை வேண்டி யவாறே, நல்லவர்கள் என்றால் எப்படி இருப்பார்கள் என்று சந்திரமுகி பட வடிவேலு பாணியில் சொல்லத் தொடங்கினான்.

அறநெறியுடன் கூடிய அன்புடன் இருப்பார்கள். ஐம்புலன்களான கண், காது, வாய், மூக்கு, தோல் போன்றவற்றை அடக்கக் கூடியவர்கள் நல்லவர்களாக இருப்பார்கள்.

இவர்களால்தான், ஓர் அறிவு முதல் ஆறறிவு ஈறாகவுள்ள அனைத்துயிர்க்கும் தன்னை அறிவிக்க எழுத்து, சொல், மந்திரம், கலை, அண்டங்கள், தத்துவம் என ஆறு பிரிவுகளாக விரிந்து நிற்கும் சிவனை உணரமுடியும்.

இவ்வாறு உணர்ந்தால், ஏழு பிறப்புக்களுக்கும் அப்பால் சென்று மீண்டும் மீண்டும் பிறப்பின்றி அவனை இறைவனின் திருவடிகளை எட்டிப்பிடித்துக்கொள்ள முடியும்.


கயூரன் ஒருமாதிரியாகப் அப்பாவைப் பார்த்தான். நீங்க ஏதோ சொல்ல வாறீங்க, எனக்கு விளங்கவில்லை என்றவாறு சென்றான்.

**“பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான் ”** பாடசாலையின் காலை வழிபாட்டில் பாடிய சிவபுராணத்தில் இன்று ஏதோ இருப்பதை உணர்ந்தான் கயூரன்.

# 02.பகிர்ந்துண்

**"ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்**
**பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்**
**வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்**
**காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே"**

-அறஞ்செய்வான் திறம், பொதுப்பாயிரம், திருமந்திரம்.



பக்கத்துவீட்டில் கயூரனின் நண்பன் தும்மிய தும்மல் ஊருக்கே கேட்டது. என்னடா இவன் இப்படித் தும்முகின்றான்.

இதுதான் சாட்டென்று, அதுதானே நான் போய்ப் பார்த்துவிட்டு வருகின்றேன் எனக்கூறி நண்பனின் வீட்டுக்குக் கிளம்பினான் கயூரன்.

நண்பனின் வீட்டில் பழுதாகிப்போன அரிசி, மைசூர்ப் பருப்பு போன்றனவற்றை எடுத்து வெளியில் கொட்டிக் கொண்டு இருந்தார்கள். அவற்றில் இருந்து வந்த தூசிகளால் நண்பனின் மூக்கு தூண்டப்பட, தொடர்ந்து தும்மிக் கொண்டிருந்தான் நண்பன்.

என்னடா இவ்வளவு பொருட்களையும் கொட்டிக் கொண்டிருக்கின்றீர்கள்? என்று கேட்டான் கயூரன்.

அதுவாடா “கொரனா” நேரம் தட்டுப்பாடு வருமென்று வேண்டி வைத்தது. இப்ப ஆறுமாதம் ஆச்சு. இப்போது எடுத்துப் பார்த்தால் எல்லாம் பழுதாகிப்போச்சு.

ஏன்டா ஆறுமாதத்துக்கு தேவையான சாப்பாட்டுச் சாமான் வேண்டி வைத்திருந்தநீங்களோடா?

அப்பாவிடம் நிறைய காசு இருக்கு அதனால் தட்டுப்பாடு வந்தாலும் என்று வேண்டி வைத்திருந்தனாங்கள்.

வசதியுள்ளவர்கள் எல்லாம் இப்படி வேண்டி வைத்துக் கொண்டால்? செயற்கையான பொருட்தட்டுப்பாடு வரத்தானே செய்யும். இதைத்தானே நேற்று அப்பாவும் அம்மாவும் கதைத்துக் கொண்டிருந்தவர்கள் என்று நினைத்தவாறு ஏதும் பேசாமல் விளையாட மனமின்றி வீட்டுக்குக் கிளம்பினான் கயூரன்.

உடனேயே வீட்டுக்கு திரும்பிய மகனை ஆச்சரியமாகப் பார்த்த அப்பாவிடம், எங்களுக்கு தேவையானவற்றை மிதமிஞ்சி சேமித்து வைக்கலாமா? அப்படி வசதி உள்ளவர்கள் எல்லாம் செய்தால் அன்றாடம் உழைப்

பவர்கள் எப்படி உண்பது? இது சரியா? எனக் கேட்டு நண்பனின் வீட்டில் நடப்பவற்றைக் கூறினான் கயூரன்.

அப்பா சிரித்தவாறே இது வசதியுள்ளவர்கள் மட்டும் செய்யும் தவறன்று. வசதியற்றவர்களும் தமக்குக் கிடைக்கும் உதவிகளை மற்றவர்களுக்கு கிடைக்க விடாது எல்லா வற்றையும் தாமே பெற்று மிதமிஞ்சி சேமித்து வீணாக்கி கொள்கின்றனர்.

இவர்கள் இருவரிடமும் இது பற்றிக் கதைத்தால் அவர்கள் அதனை விளங்கிக் கொள்வதில்லை. இல்லாவிடில் **"தக்கன பிழைத்துக்கொள்ளும்"** என்று தத்துவத்தையே பிழையாகப் பேசுவார்கள்.

மனித சமூகமே பெரும்பாலும் இவ்வாறுதான் நடக்கின்றது. அதனால்தான் திருமூலர் பகிர்ந்து உண்ணுதலின் அவசியத்தை வலியுறுத்தி உள்ளார்.

நீ கோவிலில் பார்ப்பதில்லையா, தினமும் கோவிலில் பூசை முடிய நந்தி, பலிபீடத்தில் வைக்கும் பொங்கலை, ஐயா வெளியே எறியும்போது காகங்கள் கூட்டமாக வந்திருந்து உண்பதை.

அக்காகங்களுக்கு தெரியும் அங்கு எறியப்படும் பொங்கல் உருண்டை அதிகளவிலான காகங்கள் வந்தால் போதாது என்று. இதில் பல காகங்களுக்கு பொங்கல் கிடைக்காதும் போவது வழமை.

இது தெரிந்திருந்தும் தினமும் கோவில் பூசை முடியும் நேரம் வரும் காகங்கள், மீண்டும் மீண்டும் கா.... கா...

கா... எனக் கரைந்து எல்லாக் காகங்களையும் அழைத்து பொங்கலைப் பகிர்ந்து உண்கின்றன.

அதிலும் நன்றாக அவதானித்துப் பார்த்தால், சில காகம் முன்னரே வந்திருக்கும். இயலுமை இருக்கும் ஆனாலும் பொங்கலை உண்ணாது மற்றைய காகங்கள் உண்பதை பார்த்துக் கொண்டிருக்கும். பின்னர் சிதறி இருக்கும் பருக்கைகளை உண்ணும். பசித்தவற்றுக்கு இடம்கொடுத்து, பின்னர் தான் அவை உண்கின்றன.

இதனைப்போலவே மனிதர்களும் ஏனையோருக்கு நல்லவர் கெட்டவர் எனப்பாராது பசித்தோருக்கு கொடுத்துண்ண வேண்டும். உணவு உண்ணமுன் யாருக்கேனும் விருந்து கொடுக்க எதிர்பாத்திருக்க வேண்டும். ஆனால் சிறு பொழுதுகளான காலை, மதியம், இரவு உணவுகளை காலந்தாழ்த்தாது உண்ண வேண்டும்.

அப்போ யாரும் வராவிடில் மிஞ்சிய உணவுகளை என்ன செய்வது?

மிஞ்சிய உணவுகளை உடலுக்கு பொருந்தக்கூடிய வகையில் மீள சமைத்து உண்ணலாம். அல்லது ஏனைய பிராணிகளுக்கும் கொடுக்கலாம்.

அடியவர்களுக்கு இடும் உணவு சிவனுக்கு படைக்கும் உணவுக்கு சமனாகும். அத்துடன் இறைவனின் அன்புக்கும் உரித்தானவர்கள் ஆவோம்.

# ０３.இன்னுரை

**“யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை**
**யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை**
**யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி**
**யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே”**

-அறஞ்செய்வான் திறம், பொதுப்பாயிரம், திருமந்திரம்.

அம்மம்மா கொஞ்ச நாட்களாக லொக்கு... லொக்கு... என்று இருமிக் கொண்டு இருந்தீங்க, நேற்றில் இருந்து இருமல் குறைஞ்சிருக்கு. மருந்தெடுத்தும் குறையாத இருமல், இப்ப எப்படி குறைஞ்சது?



அந்தத் டொக்ரர் தம்பி வந்து கதைச்சுப்போட்டு போனதில் இருந்து இருமல் தானாகவே குறைஞ்சிடுச்சு. எவ்வளவு அன்பாக கதைத்தது அந்தத் தம்பி. இந்தப் பனிக்கு கொஞ்சம் இப்படித்தான் இருக்குமாம் இந்த இருமல்.

என்ன அம்மம்மா கதைச்சாலே வருத்தம் மாறுமோ? வியந்தான் கயூரன்.

பாதிவருத்தம் மனம் பாதிக்கப்படுவதால்தான் வருகின்றது. இப்ப யாருக்கு மனம்விட்டு கதைக்க முடியுது. நேரமும் இருக்கே? காலில் சில்லுப் பூட்டிக் கொண்டெல்லோ திரியினம்.

உண்மையாகவோ அம்மம்மா?

உண்மைதான் கயூரா, **“விரும்பியது கிடைக்காமையும் விரும்பாதது கிடைத்தலும் நோயை உண்டாக்கும்”** என்று சித்தர்களே சொல்லியிருக்கின்றார்கள். இப்பதானே உளவியல் மருத்துவம், ஆற்றுப்படுத்தல் என தொடங்கியிருக்கினம்.

எங்கட காலத்தில் கூட்டுக்குடும்பமாக ஒருத்தரரோட ஒருத்தர் மனம்விட்டுக் கதைத்தே நோயில்லாமல் வாழ்ந்தனாங்கள். இப்ப மனங்கள் குறுகி, ஒருத்தரை பார்த்து ஒருத்தர் ஒப்பிட்டு வாழவெளிக்கிட்டதும், தனித்துவாழவும் வெளிக்கிட்டுத்தானே விதம்விதமான கிளினிக்குகளும் மருந்துகளுமாக திரிகின்றார்கள்.

எப்படி அம்மம்மா அப்படி வருத்தம் மாறும்?


நம்பிக்கைதான்.

எனக்கு ஒரு பிரச்சினை என்றால் என்னைக் கவனிக்க உறவுகள் இருக்கினம் என்ற நம்பிக்கை, மனத்தைரியம் எங்கட உடம்பின் செயற்பாடுகளை நன்றாக சீரமைத்து

சிறப்பாக தொழிற்பட வைத்துவிடும்.

இதன்மூலம் நோய்கள் விரைவாக மாறி ஆரோக்கியமாக வாழலாம். இதனால்தான் யாருக்கும் வருத்தம் வந்திருக்கும் போது "மனதைத் தளரவிட்டிராம இருக்கவேனும்" என்று சொல்லுவார்கள்.

கடவுள் காப்பாத்த மாட்டாரா?



கடவுள்தானே எங்கள் உச்ச நம்பிக்கை அவர் கைவிட்டு விடுவாரா? அவர்தான் அன்பே சிவமாச்சே. அதனாலதான் மாணிக்கவாசகர் சிவபுராணத்தில் **"நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி "** எனப் பாடியுள்ளார்.

ஆனால் கடவுள் எங்களுக்குத் தந்திருக்கும் பகுத்தறிவினைக் கொண்டு நாம் முயற்சிக்க வேண்டும். சிவனருட்படியே அனைத்தும் நிகழும். இதைத்தான் யோகர் சுவாமிகள் **“ஒரு பொல்லாப்பும் இல்லை எல்லாம் எப்பொழுதோ முடிந்த காரியம்”** என குறிப்பிட்டுள்ளார்.

**“நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி ”**, அப்படி என்றால்?

அடியார்களது அன்புக்குள் அகப்பட்டு நின்ற மாசற்ற அன்புள்ள இறைவனின் திருவடியே போற்றி என்பதுதான் அதன் பொருள். அப்படியான இறைவனை நாம் தினமும் அன்புடன் வணங்குதல் வேண்டும்.

பூவைத்து அல்லது பச்சை இலையாவது வைத்து வணங்குதல் வேண்டும். இதனையே **“யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை ”** என திருமூலர் திரு மந்திரத்தில் பாடியுள்ளார்.

கெட்டிக்காரன்.

அந்த திருமந்திரத்தில்தானே **“பசுவுக்கு ஒரு வாயுறை உணவு ”** என வருகிறது?

எங்களில் மட்டும் அன்புகொள்ளாது, அனைத்து உயிர்களிடத்திலும், என்றும் அன்பு செய்தல் வேண்டும் எனக் கூறியுள்ளார்.

ஏனென்றால் இறைவன் படைப்பில் எல்லா உயிர்களும் சமம். நாம் உணவு உண்ணும்போது ஒரு கைப்பிடி உணவாவது தினமும் வேறு உயிர்களுக்கும் கொடுத்தல்

வேண்டும் எனக் கூறியுள்ளதுடன் அனைவருடனும் அன்பாக இருத்தல் வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

அப்போ எல்லோருடனும் அன்பாக ஆதரவாக இருந்தால் நோய்கள் வராது என்று சொல்கிறீர்களா? சரி, இனிமே என்னை எதற்கும் பேசக்கூடாது, என்மீது அன்பாக இருக்க வேண்டும் விளங்குகிறதா? அம்மாவுக்கு நீங்க இதையெல்லாம் சொல்லிக் கொடுத்து வளர்க்க வில்லையா?

அம்மம்மா சிரித்துக்கொண்டே, பெரும்பாலான நோய்களின் தாக்கத்தில் இருந்து தப்பித்துக்கொள்ளலாம். ஆனால் ஒருவர் பிழைவிடும்போது கண்டித்து திருத்துவதும் அன்புதான், அதையும் புரிஞ்சுக்கோ. அதனால்தான் **“சாம தான பேத தண்டம்”** என்ற முறைகள் உண்டு தம்பி.

சரி அம்மம்மா இனி கவலைப்படாதையுங்கோ உங்களுக்கு நான் இருக்கின்றேன். என்றவாறு அம்மம்மாவை கட்டிப் பிடித்தவாறே பே...ரே...ன்டா. என்றான் கயூரன்.

# 04.நற்கேள்வி

**“உறுதுணை யாவ துயிரும் உடம்பும்**
**உறுதுணை யாவ துலகுறு கேள்வி**
**செறிதுணை யாவது சிவனடிச் சிந்தை**
**பெறுதுணை கேட்கிற் பிறப்பில்லை தானே”**

-கேள்வி கேட்டமைதல், 1ம் தந்திரம், திருமந்திரம்.

அப்பா முருகன் ஏன் பிரம்மனிடம் கேள்வி கேட்டார்? கயூரனின் கேள்வி தந்தைக்குப் புதிராக இருந்தது. முருகன் பிரம்மனிடம் பிரணவத்தின் பொருளைக் கேட்டார். இவன் என்னடாவென்றால் கேள்வியே ஏன் கேட்டது என்று, என்னைக் கேட்கின்றான்.

உனக்கு ஏன் இப்ப இந்தக் கேள்வி? எதிர்க்கேள்வி கேட்டார் கயூரனின் அப்பா.



அதுவா? சிவபுராணம் படிக்கும்போது அதில் ஒரு வரியில் **"அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே"** என்று வந்தது. நல் அறிவு வரவேண்டுமென்றால் நல்ல கேள்விகள் கேட்கப்பட வேண்டும் என சேர் சொன்னவர். பிரமனுக்கு நல் அறிவு புகட்டவே முருகன் பிரம்மனைப் பார்த்து கேள்வி கேட்டதாகவும் சேர் சொன்னவர். அதுதான் உங்களுக்கும் ......

நீ எனக்கு நல்லறிவு புகட்டப் போறியா? என்று சிரித்த வாறே பதில் சொல்லத் தொடங்கினார் அப்பா.

நாங்கள் இந்த பிறப்பெடுத்ததே எமது பாவபுண்ணியங்கள் அடிப்படையிலேயே. உயிர்களில் மனிதப்பிறவி பிறத்தல் சிறப்பானது. **"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது"** என்று ஒளவையாரே சொல்லி இருக்கின்றார்.

அப்படிப்பட்ட மானிடராய்ப் பிறந்த நாம் இப்பிறப்பிலேயே எமது பாவங்களைத் தீர்த்து இறைவனின் திருவடிகளைப் பெற வேண்டும் என்றால் எமது பாவங்கள் தீரும்வரை எமது உயிரையும் உடம்பையும் நன்றாகப் பேணுதல் வேண்டும்.

அதேபோல் எம்மை சுற்றியிருக்கும் அறியாமைகளையும், அஞ்ஞானங்களையும் அகற்ற, நல்லோரிடம் நல்ல கேள்விகளைக் கேட்பதன் மூலம் தெளிவடைந்து சிவனே எல்லாம் எனச் சிவசிந்தனை பெற்று, இனியொரு பிறப்பில்லாது சிவனின் திருவடியைப் பெறலாம்.

இதனால்தான் மாணிக்கவாசகர் சிவபுராணத்தில் **"பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்து அருளி, மெய்ஞ் ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே"** எனப்பாடுகின்றார்.

அப்படியென்றால்? கயூரனின் கேள்வி குழப்பத்துடன் வந்தது.



அப்படியென்றால், என்னைச் சுற்றியுள்ள அறியாமைகள், பொய்கள் என்பனவற்றை அகற்ற எனக்கு குருவாக வந்து ஞானத்தை தந்து உண்மையை உணர்த்தியவன் சிவனே என பாடியுள்ளார்.

அப்போ எங்கட சேர் கடவுளா அப்பா?

நல்லறிவைப் புகட்டும் ஆசிரியர்கள் கடவுளுக்கு சமனானவர்களே. அதனால்தான் **“மாதா பிதா குரு தெய்வம்”** என்று கடவுளுக்கு முன் குறிப்பிட்டுள்ளார்கள்.

என்னுடைய நண்பர்களெல்லாம் சேர்மாரை கிண்டல் பண்ணிறாங்களே? அப்போ அவர்கள் பாவம் செய்கின்றார்களா?

ஒருவருடைய மனம் நோகும்படி யாரைக்கிண்டல்

பண்ணினாலும் பாவமே. இனிமே பாடம் நடக்கும்போது வகுப்பைக் குழப்பாமல் பாடத்தோடு சம்மந்தமான நல்ல கேள்விகளைக் கேட்டு அறிவினை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

அது சரி .... ஆனால் எங்கட சேர் சரியான அறுவை .... ஆசிரியர் தினத்துக்கு தனது சேருக்கு போட கட்டிய மாலையை மிகப்பக்குவமாய் வாழைத் தாரினுள் வைத்துக் கட்டிக்கொண்டான்.

அப்பா தனக்குள் சிரித்துக்கொண்டே பத்திரிகையை விரித்தார்.

"ஆசிரியரைத்தாக்கிய மாணவன்" செய்தியாகத் தெரிந்தது. அந்த மாணவனை நினைத்துக் கவலை கொண்டார். கிடைத்தற்கரிய மானிடப்பிறவியைப் பெற்றுக் கொண்டவன் பாவங்களைச் செய்து மீண்டும், மீண்டும்......

**"புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி பல்மிருகமாகிப் பறவையாய்ப் பாம்புகளாய் கல்லாய்......."**

# 05.அன்பே சிவம்

**“அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே”**

- அன்புடைமை, 1ம் தந்திரம், திருமந்திரம்.

வாங்கோ வாங்கோ வாயெல்லாம் பல்லாக கயூரனின் சித்தப்பாவை வரவேற்றார் தர்மகத்தா.

வெளிநாட்டில் இருந்து வந்த சித்தப்பாவுக்கோ தாங்கமுடியாப் பெருமை. தன்பிள்ளைகளுக்கு பிரஞ்சுமொழியில் அந்தக் கோயிலைப் பற்றியும், தாங்கள் ஊரில் இருக்கும்போது, அது சின்னதாக இருந்ததும், தற்பொழுது அது வானளாவிய கோபுரங்களுடன் இருப்பதையும் அதற்குத் தாங்கள் செய்த உதவிகளையும் பெருமையாக சொல்லிக்கொண்டே வந்தார்.

இடையிடையே கோவில் நிர்வாகத்தினரும் சித்தப்பாவை உசுப்பேத்திக் கொண்டே வந்து கொண்டிருந்தனர்.


வந்தவர்கள் நின்றவர்கள் எவரும் இறைசிந்தையற்று ஆடம்பரமாக கோவிலைக்கட்டி தமது பெயர்களைப் பொறிப் பதிலேயே குறியாக இருந்தனர்.

கோவிலுக்கு வெளியே ஓர் அம்மாவின் அழுகைக்குரல் கேட்கவே எல்லோர் பார்வையும் கோவிலுக்கு வெளியே சென்றது.

அங்கு கச்சான் விற்றுக்கொண்டிருந்த வயதான மூதாட்டியையும், கச்சான் கடகத்தையும் எட்டி உதைத்து,

மூதாட்டியையும் வன்சொற்களால் பேசிக் கலைத்துக் கொண்டிருந்தார் அந்தக் கோவில் தர்மகத்தா சபை உறுப்பினர் ஒருவர்.

இச்செயல்களை இரசிக்காது சித்தப்பாவின் பிள்ளைகளின் முகம் சுழித்துக்கொள்ள, தர்மகத்தா அவர்களின் கவனத்தைத் திசை திருப்ப, கோயிற் சிற்பங்களைக் காட்டியபடியே, அதுகள் இப்படித்தான் திருந்தாதுகள் என்றபடி ஏதோதோ விளக்கங்கள் கொடுத்தபடி சென்றுகொண்டிருந்தார்.



கயூரனின் சித்தப்பா ஆதிமூலத்தை நோக்கினார் அதைக்கண்ட தர்மகத்தா அந்த ஆதிமூலச் சிலை தனிக்கருங்கல், விசேட அனுமதி பெற்று இந்தியாவில்

இருந்து கொண்டு வந்தனாங்கள். நீங்க அனுப்பின காசிலதான் எல்லாம் என்று கூறினார்.

கயூரனின் அப்பா சொன்னார், இப்ப உள்ளிருப்பவர் சிவன். கற்சிலையல்ல என்றவுடன், அப்பாவை முறைத்துக்கொண்ட தர்மகத்தா, சித்தப்பாவை நோக்கி உங்கட அண்ணாதான் கோயிலுக்கு வருவதுடன் சரி ஒரு உதவியும் செய்வதில்லை என்று கூறிச் சிரித்தார்.

அடுத்தமுறை வரும்போது நாங்க திருவிழாவுக்கு வருகின்றோம் எனக்கூறி கிளம்பினர் கயூரன் குடும்பத்தினர்.

ஆண்டுகள் இரண்டுபோக, திருவிழாவுக்கு வந்திறங்கினர் சித்தப்பா குடும்பத்தினர். சந்தோசமாக குடும்பமாக கோயிலுக்குச் சென்றவர்களை அங்கு நின்ற தர்மகத்தா கோயிலுக்குள் விடாது மறித்துக்கொண்டார்.

ஏன் ஐயா மறிக்கிறீங்க?

பிள்ளைகள் கலாசார உடுப்போடு வரவில்லை. பாவாடை சட்டை போட்டுக்கொண்டு வாங்கோ.

அவை சின்னப்பிள்ளைகள், அங்கு பிறந்து வளர்ந் தவர்கள். பழக்கமில்லை. பிறகு வரும்போது பாவாடை சட்டை தைத்து போட்டுக் கொண்டு வருகின்றோம். திருவிழாக்கென்று அங்கேயிருந்து வந்தனாங்கள் இப்ப விடுங்கோ அண்ணை என்று வழமையான நட்புறவுடன் சித்தப்பா கேட்க.

இல்லைத் தம்பி கோவில் சட்டதிட்டங்களை குழப்பாம

போங்கோ என்றார்  தர்மகத்தா.

நாங்க எவ்வளவு காசு கோவிலுக்கென்று தந்தனாங்க?

போனமுறை கார்வரை வந்து வழியனுப்பிய தர்மகத்தா, இப்ப காசு முக்கியமில்லை, கலாசாரம்தான் முக்கியம் விலத்துங்கோ என்றாவறு அங்கிருந்து வேறுபக்கம் விரைந்தார்.

இந்தச் சலசலப்பில் வீட்டில் இருந்து தொலைபேசி அழைப்புவர கயூரனின் அப்பா பதட்டமானார்.

என்னவென்ற கேள்விக்கு அப்பம்மா ரோட்டில் மோட்டார் சைக்கிளுடன் மோதி விழுந்து விட்டாவாம் எனக் கூறியவாறு விழுந்த இடத்துக்கு விரைந்து சென்றனர்.

விபத்து நடந்த இடத்துக்கு சென்றபோது அங்கு அப்பம்மா இல்லை. அங்கு நின்றவர்கள், ஒரு ஆட்டோக்காரர் வைத்தியசாலைக்கு கூட்டிச் சென்றுவிட்டார் எனக்கூற விரைந்தனர் வைத்தியசாலைக்கு.

வைத்தியசாலையை அண்மிக்கவும் ஆட்டோக்காரரின் தொலைபேசியில் இருந்து அழைப்பு வந்தது. சேர், நான் குமார் உங்கட அம்மாவுக்கு பிரச்சினை ஒன்றுமில்லை. நீங்க ஆறுதலாக வாங்கோ சேர்.

வைத்தியசாலையில், நன்றி குமார். நல்லநேரத்துக்கு உதவிநீங்க. இதென்ன அம்மாவுக்கு பத்துப்போட்டிருக்கு?

அது எலும்பு சின்னதாக உடைஞ்சிடுச்சாம். நீங்க பதட்டமாயிடுவீங்க என்று போனில் சொல்லவில்லை.

நன்றி. குமார் உங்களுக்கு மிக்க நன்றி. உங்களுக்கு நான் உதவனும். உங்க ஆட்டொ கூலி எவ்வளவு என்றவாறே சித்தப்பா பணத்தை எடுக்க..

ஐயோ வேண்டாம். உங்க அண்ணா எனது ஆசிரியர். எனக்கு ஆட்டோ எடுக்க உதவி செய்ததும் அவர்தான்... என் மகனுக்கு படிப்புச் செலவுக்கும் உதவுகிறார். அவர்தான் எங்களுக்கு கடவுள் என்று சொல்ல....

சித்தப்பாவுடைய மனதில், **"கண் நுதலான் தன் கருணைக் கண்காட்ட வந்து எய்தி"** மாணிக்கவாசகருக்கு சிவன் தோற்றமளித்த சிவபுராண வரிகள் ஞாபகம் வந்தது.



# 06.சமாதி

**“எண்ணிலா ஞானி யுடலெரி தாவிடில்**
**அண்ணல்தங் கோயில் அழலிட்ட தாங்கொக்கும்**
**மண்ணில் மழைவிழா வையகம் பஞ்சமாம்**
**எண்ணரு மன்னர் இழப்பார் அரசுமே”**

- சமாதிக் கிரியை, 7ம் தந்திரம், திருமந்திரம்.

வாவ்..., நல்லதொரு இடம். கடற்கரையில் இப்படி ஒரு மண்டபம். ஓடிவிளையாட, கடலில் நீந்தி விளையாட.... நல்ல காற்று வருகுதப்பா என்றவாறு குதுகலித்துக் கொண்டிருந்தான் கயூரன்.




கீரிமலை நகுலேச்சரத்துக்கு அண்மையாக, கீரிமலை முத்துமாரி அம்மன் கோயிலுக்கு முன்பாக உள்ள **“குழந்தைவேல் சித்தர் சமாதி சிவாலய”** சூழலே அவனுக்கு இவ்வளவு குதுகலத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது.

கடற்கரையோரமாக பத்தடி உயரத்தில் ஆள் அளவுக்கு சிவலிங்கப்பெருமான் ஆகாயத்தையே கூரையாகக் கொண்டு பஞ்சபூதங்களின் மத்தியில் கம்பீரமாக வீற்றிருக்கும் காட்சி மாலை வேளையில் மிக ரம்மியமான தொன்றாகவே காணப்பட்டது.

அதன் அருகே காணப்படும் சமாதிகள் ஒருவித அமைதியையும், இறையுணர்வையும் தோற்றுவித்துக் கொண்டிருந்தன.

சிவனடியார்கள் சிலர் சிவலிங்கப்பெருமானுக்கு கடல்நீரை சிறிய குடங்களில் எடுத்துவந்து பயபக்தியுடன் அபிடேகம் செய்து கொண்டிருந்தனர்.

புங்கைமர நிழலில் இவற்றை எல்லாம் பார்த்துக்கொண்டு பரவச நிலையில் அமர்ந்திருந்த கயூரனின் அப்பாவை, கயூரனின் குரல் இவ்வுலகிற்கு கொண்டுவந்தது.

அப்பா, இப்படி கடற்கரை வெட்டவெளியில் இருக்கும் இறைவனுக்கு குளிர், சூடு தாக்காதா?

ஒன்றும் தாக்காது கயூரா. விண்ணுலகம் மண்ணுலகம் ஏன் அதற்கப்பாலும் கலந்திருப்பவர் சிவன். இதனைச் சிவபுராணத்தில் மாணிக்கவாசகர் இவ்வாறு குறிப்பிடுகின்றார், **“விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்.....”**

அதேபோல் இன்னொரு வரியில் **“வெய்யாய் தணியாய் இயமானன் ஆம் விமலா...”** என சிவனே வெம்மை யாகவும், குளிர்ச்சியாகவும் நிறைந்துள்ளவர் எனக் குறிப்பிடுகின்றார்.

அன்புடன் அணுகுதலே முக்கியம், பூசலார் மனக்கோயில் கட்டியதும் அப்படியே. இங்கு சமாதிகளில் இருக்கும் சித்தர்கள் யாரும் மாடமாளிகைகளுடன் கூடிய கோயில்களைக் கட்டியதில்லை. ஆனால் திருவடிச்சிந்தை கொண்டமையால் சிவனடி சேர்ந்தவர்கள். அவர்களது ஆத்மா முக்தி நிலையை எட்டியிருக்கக் கூடியன.

ஏன் இவர்களைத் தாட்டிருக்கிறார்கள்? எங்களது சடலங்கள் எரிப்பதுதானே முறை என படித் திருக்கின்றேன்.

நான் உனக்கு முன்னரே சொல்லியிருக்கின்றேன் அல்லவா? எமது உடம்பையம் உயிரையும் நன்றாக பேணிப்பாதுகாக்க வேண்டுமென்று?

ஏனென்றால் பெறுதற்கரிய இம்மானிடப் பிறவியைப் பெற்று, எமது அறியாமை அகற்றி, இறைசிந்தை எம்மனம் முழுதும் ஆட்கொள்ளும்வரை இவ்வுடம்பை நாம் பாதுகாத்தல் வேண்டும்.

அதனால்தான் திருமூலர் **“உடம்பார் அழியில் உயிரார்' அழிவர், திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்....”** என திருமந்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு இறையருள் பெற்றவர்களே இவ்வாறு ஞானிகளாகவும், சித்தர்களாகவும் உருவாகின்றார்கள். இவர்கள் மாணிக்கவாசகர் சிவபுராணத்தில் குறிப்பிட்டது போல் **“போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்”.**

அதாவது வணங்கிப் புகழ்ந்து தொண்டராயிருந்து

பொய்யான நினைவு, சொல், செயல்களெல்லாம் அவர்களிடமிருந்து அழிந்து மெய்த் தொண்டரானவர்கள்.

அவர்களது உடம்பில் நல்ல அதிர்வுகளே காணப்படும். அவர்களது உடலில் இறைவன் குடிகொண்டு சிவமாகி விடுவார்கள். அவ்வாறு இறைவன் எழுந்தருளிய உடலை தீயினில் எரிக்காது சமாதி நிலையில் மண்ணினுள் வைத்துக் கொள்ளல் வேண்டும். தீயினில் ஆகுதியாக்கக் கூடாது. அவ்வாறு செய்வது அவர்களை அழிப்பது போலாகும்.

அதிலும் சமாதி நிலை எனும்போது ஆசனங்களில் குறிப்பாக பத்மாசனத்தில் இருந்த நிலையிலேயே இருந்து சமாதி அடைந்திருப்பார்கள். அந்தநிலையிலேயே அவர்களை மண்ணினுள் வைத்து சமாதி கட்டிக் கொள்வார்கள்.

அவ்வாறு வைக்கப்பட்ட இடங்களில் சிறு சிறு தூபிகள் அல்லது கோயில்களை கட்டி வழிபடுவார்கள். அப்படியானதொரு இடமே இவ்விடமும்.

இவ்வாறான கோயில்களுக்கு சிறந்த சக்தி இருப்பதாக நம்பு கின்றார்கள். சில சித்தர்கள் உயிருடன் சீவ சமாதியடைந்த நிகழ்வுகளும் உண்டு. பொன்னாலையில் உள்ள பெரியவர் ஆலயம் இவ்வாறானதே. பெரியவர் என்று அழைக்கப்படும் சித்தர் இங்கு சீவ சமாதியடைந்துள்ளார்.

அவர் குறிப்பிட்ட இடத்தில் சமாதி வைக்காமல் வேறொரு இடத்தில் சமாதிக்கான ஏற்பாடுகள் செய்யும்போது அவரே மீள எழும்பி தான் குறிப்பிட்ட இடம் இதுவல்ல என சரியான இடத்தை குறிப்பிட்டதாக வரலாறு உண்டு.

நல்லூர் முருகன் ஆலயத்திலும் ஞானி ஒருவரின் சமாதி உண்டு.

எனவேதான் அவர்களை எரிப்பதில்லை. அவ்வாறு எரித்தால் இறைவன் குடிகொண்ட கோவிலை எரிப்பதற்கு ஒப்பாகும். மீறி எரித்தால் மழைபெய்யாது பஞ்சமேற்படும். அரசர்களும் தம் அரசினை இழக்கவேண்டி ஏற்படும் என்கின்றது திருமந்திரம்.



# 07.மயக்கும் கள் (போதை)

**“மயங்குந் தியங்குங்கள் வாய்மை அழிக்கும்**
**இயங்கும் மடவார்தம் இன்பமே எய்தி**
**முயங்கும் நயங்கொண்ட ஞானத்து முந்தார்**
**இயங்கும் இடையறா ஆனந்தம் எய்துமே”**

-கள்ளுண்ணாமை, 1ம் தந்திரம், திருமந்திரம்.

என்ன ராசாத்தி இவ்வளவு தாமதமாக வருகின்றாய்? தோட்ட வேலை வெயிலுக்குள் பார்க்க ஏலுமே? எங்கே மனிசன் வரவல்லையோ?

கயூரனின் தாயாரின் கேள்விக்கு ராசாத்தி பதில் பேசாது நின்றாள்.



என்ன பிள்ளை நான் கேட்டுக்கொண்டிருக்கின்றேன், நீ பேசாம இருக்கின்றாய்?

இரண்டாவது மகள் கொப்பி வேணுமென்று கேட்டவள்,

அந்த மனுசன் குடிச்சுப்போட்டு வெறியில மறந்துபோய் வந்திட்டுது. பிள்ளை ஏமாந்து போச்சு. பள்ளிக்கூடமும் போகவில்லை. வேண்டித்தருவேன் என்று சொன்னால், வாக்குமாறாமல் வேண்டி கொடுக்க வேண்டும். இல்லையென்றால் பிள்ளைகளும் மதிக்காதுதானே.

பிள்ளைகள் அதற்குப்பேச, தன்னை ஒருத்தரும் மதிக்கவில்லை என்று என்னோட சண்டை பிடிச்சுக் கொண்டு போனவர்தான். யாருடைய வீட்டில் மதி மயங்கிக் கிடக்குதோ தெரியாது.

குடிகாரன் பேச்சை நம்பி நீ பிள்ளைகளின் படிப்பை கவனிக்காமல் விட ஏலுமோ? கயூரா உன்னிடம் இருக்கிற புது கொப்பியல இரண்டை ராசாத்தியிட்ட கொடு, மகளிட்ட குடுத்திட்டு வரட்டும். அவன் வராம தோட்டத்துக்கு போகவும் ஏலாது. வரட்டும் ஆள்.

வேண்டாம் அம்மா.

முதலில் பிள்ளைகளைப் பள்ளிக்கூடம் அனுப்பிவிட்டு வா, பிறகு பார்ப்பம் வேலையை.

தொடர்ந்து பலநாட்களாக ராசாத்தியின் கணவன் வீட்டு பக்கம் வருவதே இல்லை. இப்படியே வருடங்கள் கடந்தன. ராசாத்தி கஸ்டத்தின் மத்தியிலும் பிள்ளைகளை வளர்த்து வந்தாள்.

ஒருநாள் தெருவில் ராசாத்தியின் கணவன் வெறியில் விழுந்து கிடப்பதாக ஊரவர்கள் கூற, கட்டிய கணவன் தெருவில் விழுந்து கிடப்பதை தாங்காது அவனைத் தூக்கி வந்து வீட்டில் கிடத்தி விட்டாள். அவனோ வெறி

முறிந்ததும் திரும்பவும் சண்டை பிடித்துக்கொண்டு சென்று விட்டான்.

பின் ஒருநாள், நோய்கள் முற்றிய நிலையில், உழைக்கும் பலமின்றி இருந்தவனை கூட இருந்தவர்கள் துரத்த, பலவித நோய்களுடன் குடிக்கு அடிமையாகி நடக்க முடியாது வீடு வந்து சேர்ந்தான் ராசாத்தியின் கணவன். ஆனால் பிள்ளைகள் அவன்மீது அன்பு கொள்ளவும் முடியாது, சேர்ந்து கொள்ளவும் முடியாது தவித்தனர்.

கடவுளே தஞ்சமென்று எண்ணி ராசாத்தி அவனை திருத்தலாமென, சுகப்படுத்தலாமென முயன்றாள். அவனோ கள்ளின்றி அசையமுடியாதவனாக கள்ளின் மயக்கத்திலேயே இருந்தான். தன்னிலைக்கு இறைவனே காரணமென தூற்றினான்.

இப்படியே குடித்துக் குடித்தே ஒருநாள் இறந்தும் போனான். பிள்ளைகள் கடமைக்காக காரியங்களைச் செய்து முடித்து மறந்தனர் தந்தையை.

ஏன் அப்பா குடித்துச் சீரழிகிறார்கள்? அவருடைய பிள்ளைகளுக்கும் பாசமில்லாது போக அந்தக் குடிதானே காரணம்? எல்லாவற்றுக்கும் காரணமான கடவுள் குடியை மறக்கடிக்கமாட்டாரா?

கயூரனின் கேள்விகளுக்கு அப்பா சிரித்தபடியே பதில் கூறினார். இறைவன் எல்லாவற்றையுமே படைத்துள்ளான். அத்தோடு பகுத்தறிவையும் தந்துள்ளான். பகுத்தறிவுக்கு சவாலாக ஐம்புலன்களையும் தந்துள்ளான்.

பகுத்தறிவினைக் கொண்டு ஐம்புலன்களையும் யார்

ஆள்கின்றார்களோ அவர்களே பேரின்பமான இறைவனின் திருவடிகளை அடைவர்கள்.

இறைவனை அடைவது அவ்வளவு இலகுவான காரியமல்ல என்பதைப் புரிந்து கொண்டாயா? இல்லாவிடில் இப்படித்தான் இவ்வுலகில் துன்பத்தை அனுபவிக்க நேரிடும்.

ஐம்புலன்களும் எம்மை தீயவழிகளிலே கொண்டு செல்லும் அப்படி கொண்டு செல்லாது நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும், அதனால் என்மீது அன்புகாட்ட வேண்டும் என மாணிக்கவாசகர் சிவபுராணத்தில், **“மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய, விலங்கு மனத்தால் விமலா உனக்கு, கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்....”** என இவ்வாறு குறிப்பிடுகின்றார்.



# 08.மெய்ப்பொருள்

**“மரத்தை மறைத்தது மாமத யானை**
**மரத்தின் மறைந்தது மாமத யானை**
**பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்**
**பரத்தின் மறைந்தது பார்முதற் பூவே”**

- பராவத்தை, 8ம் தந்திரம், திருமந்திரம்.

“கல்லை மட்டும் கண்டால் கடவுள் தெரியாது, கடவுள் மட்டும் கண்டால் கல்லடி தெரியாது....” கயூரன் பாடிக்கொண்டே அப்பாவிடம் வந்தான்.

இந்த வரிகளின் அர்த்தம் தெரியுமா? எனக் கேட்டார் அப்பா.

அவன்ர வயசுக்கு உதெல்லாம் இப்ப தேவையா? என அம்மா சண்டைக்கு வர, ஏன்? அவனுக்கு இது தேவையில்லையா? இளமையில் கல்வி சிலையில் எழுத்துப் போன்றது. அதைவிட இந்த வயசில்தான் இவை பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்.


அப்போதுதான் மனதை அங்கிங்கு அலையவிடாது அவனால் பொருள் உணர்ந்து படிக்கமுடியும்.

என்னவோ செய்து தொலையுங்கோ, நீங்களாச்சு உங்க பிள்ளையாச்சு என அம்மா விலகிக் கொண்டார்.

அப்பா நீங்க சொல்லுங்க இந்த வரிகளுக்கான விளக்கத்தை என்றான் ஆர்வத்துடன்.

அதாவது சிவன் எல்லா இடமும் நிறைந்து அனைத்தையும் இயக்கிக் கொண்டிருக்கிறான். அதுதான் உண்மை. நாங்கள் நினைப்பதுண்டு, எல்லாம் நாங்கள் நினைத்தபடி

நடப்பதாக ஆனால் உண்மையில் சிவன் எங்கும் நிறைந்திருந்து அவனே அனைத்தையும் இயக்கு கின்றான். அதுதான் உண்மை.



இதனையே சிவபுராணத்தில் **"ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க"** என மாணிக்கவாசகர் பாடுகின்றார்.

இதை உணராதவர்கள் நிலையில்லாத பொருட்களில் நாட்டம் கொண்டு நிலைபேறான இறைவனை மறந்து விடுகின்றனர். இறைவனே எல்லாம் என்று நினைப்பவன் இறையருளைப் பெற்று பெருவாழ்வு பெறுகின்றான்.

பார்க்கும் பொருளை கல்லென்று பார்த்தால் அங்கு இறைவன் தெரியமாட்டார். இறைவன் என நினைத்து வணங்கினால் கல் தெரியாது.

இதனையே திருவள்ளுவர் தனது குறளில்

**“எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
**மெய்பொருள் காண்ப தறிவு”**

என்று கூறுகின்றார்.

அப்படியென்றால் எல்லோரும் கொஞ்சம் நிதானமாக சிந்தித்துப் பார்த்தால் மெய்பொருளை காணலாந்தானே? ஏன் அவ்வாறு இருப்பதில்லை?

அதுவா? இறைவன் அனைவரையம் ஆட்கொள்ள வேண்டும் என்றால், மனிதன் தனது ஐம்புலன்களையும் வெல்ல வேண்டும். நான் முதலில் சொன்னதுபோல ஐம்புலன்களின் வஞ்சனையில் இருந்து தப்பிக்க எந்நேரமும் இறைசிந்தனை கொண்டிருத்தல் வேண்டும். அவ்வாறு இருப்பவர்கள் மீதுதான் இறைவன் அருட்பார்வை கிட்டும்.

அதனைத்தான் சிவபுராணத்தில் மாணிக்கவாசகர், **“சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால், அவன் அருளாலே அவன்தாள் வணங்கி .....”** என இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

அதாவது சிவன் சிந்தனை மனதில் இருந்தமையாலேயே சிவன் அருள் கிடைத்தது, அதனால்தான் திருவாசகத்தை பாடக் கூடியதாக இருந்தது என்றும், இதன் மூலம் முன் வினைப்பயன் கழிந்து சிவனுடன் சேருவேன் என்று பாடுகின்றார்.

ஓ..... அதனால்தான் எந்நேரமும் எமக்கும் எம்மைச் சூழ உள்ளவர்களுக்கும் சிவசிந்தனை இருக்கவேண்டும். என்பதற்காக சிவ சின்னாங்களை அணியச் சொல்கின்றார்களா?

அதனால்தான் சிவதீக்கை பெறச் சொல்கின்றார்களா?

ஆமா. பார்த்தியா அம்மா உனக்கு விளங்காது என்றார். நீ சிக்கெனப் பிடித்துக்கொண்டாய்.

எல்லாம் அவனருளாலே என்று கைகளை மேலே தூக்கிக் காட்டினான் கயூரன்.

கடவுள்தான் எங்குமுள்ளாரே! பிறகேதற்கு மேலே கையைக் காட்டுகின்றாய்? என அங்கு வந்த அம்மா கேட்டார்.

கயூரன் சிரித்துக்கொண்டே கடவுள் எங்கும் இருப்பார்தான். ஆனால் எனக்கு, எங்களுக்கு மேலானவர் கடவுள். அதனால் நாங்க கடவுளை மேலே வைத்தே பார்க்க வேண்டும். அதனால் தான் அப்படிக் காட்டினேன் என்ற கயூரனை பாலகன் சம்பந்தனாகவே பார்த்தார் அப்பா.



# ௦௯.முன் வினை

**"காய்ந்த இரும்பு கனலை யகன்றாலும்**
**வாய்ந்த கனலென வாதனை நின்றாற்போல்**
**ஏய்ந்த கரணம் இறந்த துரியத்துத்**
**தோய்ந்த கருமத் துரிசக லாதன்றே"**

- நின்மலாவத்தை, 8ம் தந்திரம், திருமந்திரம்.



அப்பா, ராசாத்தியக்கா ஏன் மதம் மாறினவா? நாங்க அவங்களுக்கு உதவிகள் செய்கிறனாங்கதானே? பிறகெதற்கு? அவர்கள் பணம் தருகின்றார்கள் என்று மதம் மாறினவா?

கயூரா! இறைவன் ஒருவனே, வெவ்வேறு இடங்களில் அவரவர் விருப்பத்துக்கு ஏற்ப வெவ்வேறு வடிவங்களில்,

அவ்வப் பிரதேசங்களுக்கு ஏற்ற வகையில் பல தத்துவங்களை உருவாக்கி, பல்வேறு சமயங்களாக வழிபட்டு வந்தனர்.

ஆனால் தற்பொழுது தங்களது அதிகாரங்களை அதிகரிக்க, தமது சமயத்தின் எண்ணிக்கையை அதிகரிக்க தமது சமயங்கள் சொல்லும் தத்துவங்களை மீறி ஐம்புலன்களின் ஆசைக்கேற்ப தாமும் இருளுக்குள் சென்று கொண்டு ஏனையவர்களையும் இருளுக்குள் இழுத்துச்சென்று கொண்டிருக்கின்றார்கள்.

அவர்களை மதம் மாறாமல் தடுக்கமுடியாதா?

இறை சிந்தையற்று இருப்பவர்களிடம் நாம் அதனை விளக்கிப் பயனில்லை. அதேபோல் எல்லா உயிர்க ளிடத்திலும் அன்பு செலுத்த நாம் தவறுகின்றோம். பல்வேறு பாகுபாடுகளை காட்டுகின்றோம். நாம் விடும் தவறுகளாலும் அவர்களது அறியாமையாலும் இம்மதமாற்றங்கள் நடக்கின்றன.

இதில் முக்கியமானது மதம் மாறியவர்கள் அம்மத கொள்கைகளைக் கூட கடைப்பிடிப்பதில்லை. உண்மையை அறியாமல் ஏனைய மத கடவுள்களை நிந்திப்பதன் மூலம் மேலும் பாவங்களைச் சேர்க் கின்றனர்.

கயூரன், பாவங்களைச் சேர்க்கின்றார்கள் என்றால் அவர்கள் இறப்புடன் அவை இல்லாதுதானே போகின்றன?

இல்லை.

நாம் செய்யும் பாவங்கள் எம்மை மீள மீள பிறவியெடுக்க வைக்கின்றன. பாவங்களும் பிறவிகளுடன் தொடர்கின்றன. இதனைத்தான் சிவபுராணத்தில் மாணிக்கவாசகர் **“முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்....”** எனப்பாடுகின்றார். அதாவது முற்பிறப்பில் செய்த பாவங்களை இப்பிறப்பிலேயே கழித்து உன்திருவடி அடைய வேண்டும் என்கின்றார்.

இதனைத்தான் திருமூலரது திருமந்திரத்திலும், ஒரு இரும்பினை உருக்கி வேறு வடிவத்தில் செய்து கொண்ட பிற்பாடும் உலையில் பெற்ற வெப்பமானது புதிய உருவாமான பின்னும் நாம் அதனைத் தொடும்போது சுடுவதுபோல, வேறு வேறு பிறப்பெடுத்தாலும் கன்மவாசனையாக முன்வினை எம்மைத் தொடரும் என்கிறது.

அவர்களை நினைத்தால் பாவமாக இருக்கின்றது. ஏற்கனவே அறியாமையில் உழல்பவர்கள் மீண்டும் வினைகளைச் சேர்த்துக் கொள்கின்றார்களே? ஆதங்கப்பட்டான் கயூரன்.

**“யாதும் ஊரே யாவரும் கேளிர்”, “ஒன்றே குலம் ஒருவனே தேவன்”, “அன்பே சிவம்”** எனக் கூறிக்கொண்டு நாமும் அவர்களைப் புறக்கணித்து பகிர்ந்துண்ணாமல், அவர்களது பாவத்தையும் பகிர்ந்து கொள்ள வேண்டியவர்களாகின்றோம்.

இதனைத்தான், தன்னிடம் இருக்கும் பிரிவினைகள், தன்முனைப்பு போன்றவற்றை களைந்து உனைப்புகழ்ந்து

மெய்த்தொண்டரானேன் என்று மாணிக்கவாசகர் சிவபுராணத்தில், **“..வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப, ஆற்றேன் எம் ஐயா அரனே ஓவென்றென்று, போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்...”** என்று குறிப்பிடுகின்றார்.

கயூரன் முகத்தில் தான் எப்படி இருக்க வேண்டும், என்ற தெளிவு ஏற்பட தொடங்கியது.



# 10.சிவமும் சக்தியும்.

**“வேறுசெய் தானிரு பாதியின் மெய்த் தொகை**
**வேறுசெய் தானென்னை எங்கணும் விட்டுய்த்தான்**
**வேறுசெய் யாவருட் கேவலத் தேவிட்டு**
**வேறுசெய் யாவத்தன் மேவிநின் றானன்றே”**

- நின்மலாவத்தை, 8ம் தந்திரம், திருமந்திரம்.

அப்பா சக்தி என்பவர் யார்? அவருக்கும் சிவனுக்கும் என்ன தொடர்பு? கயூரனின் கேள்வியானது அவன் அடுத்த கட்டத்தை எட்டியதை உணர்த்தியது.



சிவனின் செயல் சக்தி. சிவனே தந்தையாகவும் தாயாகவும் உள்ளான். ஆனால் உயிர்கள் முக்தியின் பொருட்டு மீண்டும் மீண்டும் பிறப்பெடுப்பதற்காகவும்,

ஒருவரோடு ஒருவர் அன்பாக இசைந்து வாழ்ந்து திருவடியை அடையவேண்டும் என்ற நோக்கிலும், இவற்றைக் குறிக்கும் முகமாக சிவனாகவும் சக்தியாகவும் காட்சி தருகின்றான்.

அப்போ சிவன் வேறு சக்தி வேறு இல்லையா?

ஆமா, அதனால்தான் மாணிக்கவாசகர் சிவபுராணத்தில் முதலில் ஒரு இடத்தல் **"ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி"** என்பதில் எந்தை என சிவனைத் தந்தையாக கொள்கின்றார். இன்னொரு இடத்தில் **"தாயிற் சிறந்த தயாவான தத்துவனே"** என தாய்களிலேயே சிறந்த தாயாக உள்ளவனே எனப்பாடுகின்றார்.

அப்போ அம்மாவும் நீங்களும் ஒன்றா?

அப்படித்தான் நாங்கள் இருக்க வேண்டும். கருத்து, செயல் என எல்லாவற்றிலும் ஒருமித்து அன்புடன் இருந்தால்தான் உலகியல் நல்லறத்தின் ஊடாக பேரின்பப் பேற்றினைப் பெறமுடியும்.

ஆனால் எல்லோரும் அப்படியா இருக்கின்றார்கள்?

இல்லை. பெரும்பாலானவர்கள் ஐம்புலன்களின் வஞ்சனையின் பால் வசப்பட்டு நல்ல பழக்கவழக்கங்கள் இன்றி, தமது வாழ்கையினை தேவையற்ற வகையில் வீணடித்துக் கொண்டிருக்கின்றாங்கள்.

சிவன் ஒருவன் சக்தி ஒருத்தி என்பது போல் ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழ்ந்து அறம், பொருள், இன்பம்,

வீடுபேறு என சிவனடி பெறமுடியும்.

ஏன் திருமணத்தின்போதோ அல்லது திருமணத்துக்கு முன்னரோ இதுபற்றி மணமக்களிடம் விளங்கப் படுத்துவதில்லை நம் பெரியவர்கள்?

தவறுதான், ஆனால் திருமணத்தின்போது இவற்றை விளங்கப்படுத்துவதைவிட அன்றாட வாழ்வியலின் ஊடாக நாம் சிறுவயதில் இருந்தே இவற்றினை எல்லோருக்கும் சொல்லித் தரவேண்டும்.

அவ்வழியே வந்த அம்மா கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வீட்டை ஒருக்கா கூட்டிவிடுங்கோவன் என்று அன்புடன் கூறினாள்.



# அட்டைப்படம் - பூசலார் நாயனார்

பூசலார் நாயனார் சிவன் மேல் கொண்ட அன்பினால் உள்ளத்தில் கோயில் கட்டியவர்.

இவரது காலத்தில், காஞ்சி புரத்தை ஆண்டு வந்த பல்லவ மன்னன் ஒருவன் ஈசனுக்குக் கோயில் எழுப்பினான். மிகவும் பிரமாண்டமாக எழும்பிய அந்தக் கோயிலுக்குக் குடமுழுக்கு செய்ய நாள் குறித்தான்.

அன்றைய இரவு அவன் உறங்கும் போது அவன் கனவில் இறைவன் தோன்றினார். “திருநின்றவூரில் வாழும் என் பக்தனான பூசலார் கட்டிய திருக் கோயிலில், நீ குறித்த அதே நாளில் குடமுழுக்கு. அன்று நான் அங்கே குடிகொள்ளப் போகிறேன்.

எனவே, நீ குடமுழுக்கு செய்ய வேறு ஒரு நாள் குறித்துக்கொள்” என்று சொல்லி மறைந்தார். அன்பே சிவம்.

அன்பே சிவம்

# சைவ மகாசபை
# ஆன்மீக – மனிதநேய இணையம்

(பதிவு இல - HA/4/JA/318)

## தூரநோக்கு

சீரிய மனிதநேயமிக்க அறநெறிச் சிந்தையுடைய சுதேசப் பண்புமிகுந்த வளமான சமுதாயத்தை உருவாக்கல்

## இணைய அமைப்புகள்

சைவநெறிக்கூடம்
சிவஞான சித்தர் பீடம்
சிவதொண்டர் அமைப்பு
சிவமங்கையர் அமைப்பு
சிவத்தமிழ் மானிட விடியற் கழகம்

## பணிகள்

- இல்லங்கள் தோறும் பிடியரிசித் திட்டம், ஆலயங்கள் தோறும் அறப்பணி உண்டியல் திட்டம், என்பவற்றை பிரச்சாரம் செய்தல், நடைமுறைப்படுத்தல் ஊடாக அறப்பணித் திட்டங்களை முன்னெடுத்தல்.
- இளைஞர், யுவதிகளிடையே தொண்டு மனப்பான்மையை மேம்படுத்தல், மது, புகைத்தல் தவிர்ப்பு ஏற்படும் வகையில் பாடசாலை, கிராமிய மட்ட வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல்.
- சிவநெறி வழிபாடுகள், வாழ்வியல் சடங்குகள் மேற்கொள்ள பயிற்சியளித்தலும், பரப்புரை செய்தலும்.
- வடக்கு, கிழக்கு, மலையக கிராமப்புறங்களில் மாலை நேரப் படிப்பகங்களை இயக்குதல் மூலம் தமிழ் மொழி, கணித, விஞ்ஞான அடைவுமட்டத்தை அதிகரித்தலும், முன்பள்ளிக் கல்வியை வலுவூட்டுதலும்.
- ஊர்கள் தோறும் அறநெறிப் பாடசாலைகள், யோகாசன, பண்ணிசைப் பயிற்சித் திட்டங்களை முன்னெடுத்தலூடாக ஒழுக்கமிக்க அறநெறிச் சமூதாயத்தை உருவாக்கப் பாடுபடுதல்.
- பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், அங்கவீனர்கள், விசேட தேவைப்பாடு உடையோர் ஆகியோரின் வாழ்வாதார மருத்துவ நலனோன்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலும், உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடுதலும்.

இணையத்தளம் : www.saivamahasabai.com
மின்னஞ்சல் : saivamahasabai@gmail.com
தொலைபேசி : 021 2212414

**தலைமையகம்:**
சைவ மகாசபை, பழைய தபாற்கந்தோர் வீதி,
தலையாழி, கொக்குவில், யாழ்ப்பாணம்.

*Printed by:* Navalar printing (PVT) LTD. Jaffna. 021 2231644